அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி
அலுவலர்கள் மற்றும்
இணை இயக்குநர் (புதுச்சேரி)

ந.க.எண். 206043 /பி1/2021 நாள் :21.04.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு – பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் செய்தல் – பெயர்ப்பட்டியலில் திருத்தம் மேற்கொள்வது – அறிவுரைகள் வழங்குவது – சார்ந்து.

******

நடைபெறவுள்ள மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை **22.04.2022 பிற்பகல் 2.00** மணி முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திலிருந்து பள்ளிகள் தங்களது **USER ID** மற்றும் **PASSWORD**-ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கான பெயர்ப்பட்டியலில் பள்ளி மாணவ / மாணவிகளின் பெயர், பிறந்த தேதி, மொழி ஆகிய திருத்தங்கள் ஏதுமிருப்பின், சம்பந்தப்பட்ட தேர்வு மைய கண்காணிப்பாளர்களை அணுகி தேர்வு மையத்திற்கான பெயர்பட்டியலில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளும்படி, சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர் / முதல்வர்களிடம் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

நகல்

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

– தகவலுக்காக